விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 105 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை (02.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# தமிழர் பகுதியில் ஆக்கிரமிப்பு தீவிரம்

## சபையில் சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

**தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்கள் தீவிரம் அடைந்துள்ளதாக பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று இடம் பெற்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் பகுதியில் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்கள் அதி கரித்து வருகின்றது.

குறிப்பாக கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 04

## எரிபொருள் விலையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரி பொருட்களின் விலைகளை மாற்றியுள்ளது.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்தின் பிர காரம் இந்த எரி 15

## சமையல் எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சமை யல் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள் 15

### கடல் உள்வாங்கியிருந்த சந்தர்ப்பத்தில்

## மட்டி எடுக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### குருநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடல் உள்வாங்கி இருந்த சந்தர்ப்பத்தில் மட்டி பொறுக்குவதற்காக கடல் பகு திக்குள் ஒன்றரை கிலோ மீற்றர் சென்ற இளைஞர் ஒருவர் கடல் மீண்டும் பெருக்கெடுத் ததனால் கடலில் மூழ்கி உயிரி ழந்துள்ளார்.

பெரியகல்லாறு, களுவாஞ் சிக்குடி, மட்டக்களப் பைச் சேர்ந்த 15

### வித்தியா படுகொலை வழக்கு

## மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவர் சிறையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், புங்குடு தீவில் கடந்த 2015ஆம் ஆண்டு சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய் யப்பட்ட சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப் பட்ட கைதி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

கண்டி தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரி ழந்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் தவக் குமார் (வயது-37) என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார். 15

### வவுனியா சிறைச்சாலையில்

## கைதி ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த கைதி ஒருவர் மரண மடைந்துள்ளார்.

குற்றச்செயல் ஒன்று தொடர் பில் வவுனியா சிறைச் சாலையில் தடுத்து 15

## இந்திய உளவுத்துறையின் எச்சரிக்கைகள் தொடர்பில் அரசு தகவல் வெளியிட வேண்டும்

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சஜித்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்கு தல்களுக்கு முன்னதாக இந்திய உளவுத்துறையின் எச்சரிக்கைகள் பற்றிய முழு விபரங்களை இலங்கை அர சாங்கம் வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் 270 பேர் கொல்லப் 04

### ஆலயம் சென்றவர்

## மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஆலயத்தில் தேங்காய் உடைத்து விட்டு வீடு திரும் பிக்கொண்டிருந்த ஒருவர் திடீ ரென மயங்கி விழுந்து உயிரி ழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி அர்ஜீனன் (வயது-68) 15

## 7 நாடுகளுக்கு இலவச விசா ஏப்ரல் 30 வரை நடைமுறை



(கொழும்பு)

ஏழு நாடுகளுக்கு இலவச விசா வழங்கும் திட்டம் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என அமைச் சர் ஹரின் பெர்னாண்டோ அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத் தில் குறிப்பிட்டுள்ளார்.

சீனா, இந்தியா, ரஷ்யா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு, இலவச சுற்றுலா விசா வழங் கும் திட்டம் முன்னோடித் திட் டமாக செயற்படுத்தப்பட்டது.

(ம-7,10)

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வி.பி.எஸ்.டி.பத்திரண நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வி.பி. எஸ்.டி.பத்திரண சுகாதார அமைச்சினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாள ராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி செயற்பட்டு வரும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நின் சேவை நயப்பில்




திருமதி சாந்தினிமாலா தர்மராஜன் (SLTAS -II)
(ஆசிரிய ஆலோசகர் – கர்நாடக சங்கீதம்)

இசைத்துறையில்
ஆசிரியராய்...
ஆசிரிய ஆலோசகராய்...
முப்பத்தைந்து ஆண்டுகள்
நிறைவான நின் சேவைக்கும்
மகிழ்வான ஓய்வுக்கும்
மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

1989.10.29 - 1998.09.29 - யா/புங்குடுதீவு சுப்ரமணியம் மகளிர் வித்.
1998.09.30 - 1999.03.08 - யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
1999.03.09 - 2000.10.29 - யா/சென். றோக்ஸ் வித்.
2000.10.30 - 2003.08.06 - யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா
2003.08.07 - 2013.12.31 - யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
2014.01.01 - 2024.04.02 - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

(C-0047)

**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம்**

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

02.04.2024



### அமரர் பகீரதன் கிரிசாந்தி

மறைந்த நீயும்
மறையாத உன் நினைவும்
மனதிற்குள் தினமும்
மரண வேதனை
தருகின்றது...
காலங்கள் பல கடந்து விட்டது
கலையாத உன் நினைவுகள்
காயப்படுத்துகின்றது
என் இதயத்தை...
நீ மீண்டும் எக்கு குழந்தையாக
பிறக்க வேண்டும் Kiri

பிறப்பு 22.07.1997
இறப்பு 05.04.2021

(243)

சங்கானை,
நிற்சாமம்.

பிரிவால் வாடும்
செல்லமணி குடும்பத்தினர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 . 08 . 1947
மறைவு 09 . 04 . 2022

### அமரர் செல்லத்துரை இராசமணி (ஆசை)

உள்ளத்தில் உறைந்திருக்கும் உங்கள்
தெய்வீக குரல் ஓசை
இல்லத்தில் குலதெய்வமாய் குடியிருக்கும் அம்மா...
வழிகாட்டி நின்ற தெய்வம்
வானுயர்ந்த தெய்வமாகி வருடம் இரண்டு அம்மா...
உங்கள் வழித்தடத்தில் வாழ்ந்திடுவோம்
சாந்தியாய் உறங்கிடம்மா.....

ஆசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(0006)

குடும்பத்தினர்

## கண், கால் வலி தாங்க முடியாமல்

# விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கண் மற்றும் கால் வலி காரணமாக விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு பகுதியை சேர்ந்த கோபால் புஸ்பராசா (வயது 65) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சில காலங்களுக்கு முன்னர் கீழே விழுந்த நிலையில் இரண்டு கால்களிலும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு கிளிப் பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் இவருக்கு கண் வலியும் காணப்படுகிறது.

இந்நிலையில் இரண்டு வலிகளும் தாங்க முடியாத நிலையில் அவரது வீட்டில் உள்ள மாட்டுக் கொட்டகையில் தூக்கிட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வேளை இடையில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7.10)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி உப அதிபர் **ச.கிருசாந்தன்** அவர்களின் தந்தையார்

### அமரர் நா.சபாரத்தினம்

அவர்கள் மறைந்த செய்தியறிந்து
துயரடைகின்றோம். அவரது
மறைவினால் துயரடைந்துள்ள
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-0045)

**கல்லூரிச் சமூகம்**
**யா/ மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பளை**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3318 | 076 097 3127

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 19 . 02 . 1942
மறைவு 31 . 03 . 2024

எமது பாடசாலையின் பழைய மாணவியும் மற்றும்
பழைய மாணவர்களின் தாய்ச்சங்க நிர்வாகக்குழு உறுப்பினருமான

### அமரர் திலகவதி பெரியதம்பி

(ஓய்வு நிலை வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்)

வந்தபணி முடிவுற்று நான் வருகின்றேன் என
சிந்தை மயங்கி மனம் நொந்தவர்க்கு விடை கொடுத்து
பந்தம் அறுத்து பாசம் விடுத்து அந்த உலகம் சேர்ந்தீர்
ஆண்டவன் பாதம் சேர்ந்து பணிசெய்திடுவீர்...

அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிர்வில்....

**பழைய மாணவர் தாய்ச்சங்கம்**
**யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**
**பருத்தித்துறை.**

(C-0049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளிடையே அதிகரிக்கும் பார்வைக் குறைபாடுகள்

## எச்சரிக்கை விடுக்கும் வைத்திய நிபுணர்கள்

(கொழும்பு)

**நாட்டில் பார்வைக் குறைபாட்டால் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுவதாக வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**



இதனால் பெரும்பாலான குழந்தைகள் மூக்குக் கண்ணாடி அணிவதை வழக்கமாக வைத்துள்ளதோடு, தற்போது லென்ஸ் பயன்பாடும் அதிகரித்து வருகின்றது.

குழந்தைகளின் பார்வைக் குறைபாடு தொடர்பில் வைத்திய நிபுணர்கள் மேலும் விளக்கமளிக்கையில்,

அதிக நேரம் வீட்டுக்குள்ளேயே செலவிடுவதும், தொழில்நுட்பத்திற்கு அடிமையாகி இருப்பதும் இன்று அதிகமான குழந்தைகள் கிட்டப்பார்வை கொண்டவர்களாக இருக்க முக்கிய காரணமாக அமைந்திருப்பதாக வைத்திய நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருவரின் கண் பார்வை மிக நீளமாக இருக்கும்போது அல்லது கார்னியா மிகவும் வளைந்திருக்கும் போது கிட்டப்பார்வை ஏற்படலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பார்வைக் குறைப்பாடுகள் ஏற்படும் பொழுது கண்ணாடியை வைத்தியர்கள் பரிந்துரைக்கின்றனர்.

எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் பார்வைக் கோளாறுகள் அனைத்து விடயங்களிலும் சவாலாக மாறும் என வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி-5-6)

## எண்ணெய் விலை அதிகரிப்பு




(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்று சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.18 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.96 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 1.72 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது. (நி-5-6)

## ரஷ்ய இராணுவத்தில் இணைய வேண்டாம் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

ரஷ்ய இராணுவத்தில் சேர வேண்டாமென முப்படையைச் சேர்ந்த அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் இந்நாட்டு பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் இணைவதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிற்கு எந்த தொடர்பும் இல்லையென அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் இணைந்துகொண்ட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் அண்மையில் உயிரிழந்துள்ளதாக ஊடகங்கள் வெளியிட்ட தகவல் தொடர்பில் பரபரப்பாக பேசப்பட்டது.

எனினும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, தூதரகங்கள் ஊடாக நாட்டுக்கு அறிவிக்கப்படவில்லையென பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினரை ரஷ்யாவிற்கு அனுப்புவதற்கு இலங்கை இராணுவத்திற்கும் ரஷ்ய இராணுவத்திற்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத பின்னணியில் இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு விசேட ஊக்கத்தொகை

(கொழும்பு)

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேட மாதாந்த ஊக்கத்தொகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மார்ச் முதல் டிசெம்பர் வரையிலான 10 மாத காலத்திற்கு இந்த ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பிரதேச செயலாளர் ஒருவருக்கு 15,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## கடவுச்சீட்டு வழக்கில் இருந்து விமல் வீரவன்ச விடுவிப்பு



(கொழும்பு)

கடவுச்சீட்டு வழக்கில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விடுவிக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றினால் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குடிவரவுச் சட்டத்தை மீறிச் செயலற்ற கடவுச்சீட்டுடன் வெளிநாடு செல்ல முயற்சித்ததாகக் கூறி அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஜனாதிபதி விசாரணைக்குழுவில் ஆஜராக மைத்திரிக்கு உத்தரவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஜனாதிபதி விசாரணைக்குழுவில் முன்னிலையாகி உரிய ஆதாரங்களுடன் தகவல்களை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இன்று விசாரணைக் குழு முன் ஆஜராகி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அவர் அளித்த வாக்குமூலம் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிக்குமாறும் அந்த எழுத்து மூல அழைப்பில் குறிப்பிடப்பட்டுளளது.

கடந்த 2023 செப்டெம்பரில் ஒளிபரப்பப்பட்ட செனல் 4 திரைப்படத்தின் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி வெளிப்படுத்திய தகவல்களின் விசாரணை உட்பட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஐ.எம்.இமாம் தலைமையிலான விசாரணைக் குழுவே இந்த அழைப்பை விடுத்துள்ளது.



விசாரணைக் குழுவின் தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மனோகரன், இது தொடர்பான எழுத்து மூல அழைப்பை கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளார். (நி-5-6)

## புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

### பொலிஸார் அறிவுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டு காலத்தினை முன்னிட்டு பொது மக்களின் பாதுகாப்பிற்காக விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக வெளியே செல்லும் மக்கள் கொள்ளையர்களிடம் இருந்து தங்களது சொத்துக்கள் மற்றும் நகைகள், பணத்தினை பாதுகாத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் பொருட்கள் கொள்வனவிற்காக செல்லும் போது தங்களது பணப்பை மற்றும் நகைகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், உணவு வகைகள் மற்றும் பழங்கள் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போல்ட் 'வேகம்'; சகால் 'சுழல் ஜாலம்'

## ராஜஸ்தானிடம் வீழ்ந்து மும்பை ஏமாற்றம்




ஐ.பி.எல்., லீக் போட்டியில் ராஜஸ் தான் அணி 6 விக்கெட் வித்தியாசத் தில் மும்பை அணியை வீழ்த்தியது. சுழலில் அசத்திய சகால், வேகத்தில் அசத்திய போல்ட் தலா 3 விக்கெட் டுக்களை சாய்த்து அசத்தினர்.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. வான்கடேயில் நேற்று நடைபெற்ற 14ஆவது லீக் போட்டியில் மும்பை அணியும் ராஜஸ்தான் அணி யும் மோதியது. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு ஆரம்ப ஆட்டக்காரரான ரோகித் சர்மா ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இஷான் கிஷன் 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஆடவந்த நமன்திர் மற்றும் பிரேவிஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமல் டக் அவுட் ஆயினர். ஓரளவுக்கு நிலைத்து ஆடிய ஹர்திக் பாண்ட்யா (34), திலக் வர்மா (32) ஓட்டங்கள் சேர்த்தனர். மற்றவர்களும் சோபிக்கவில்லை. இறுதியில் மும்பை அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. மும்பை அணியின் டிரண்ட் போல்ட் மற்றும் சகால் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

126 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு அடுத்து கள மிறங்கிய ராஜஸ்தான் அணி, 15.3 ஓவரி லேயே 4 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்டங்கள்எடுத்து 6 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றி பெற் றது. அதிகபட்சமாக பராக் ஆட்டமிழக்கா மல் 54 ஓட்டங்கள்எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார். (ம-7,10)

### இந்திய...

பட்டனர்.

இந்தநிலையில் குறித்த தாக்கு தல்களுக்கு முன்னதாக இந்திய உள வுத்துறை எத்தனை முறை எச்சரித் துள்ளது என்பதை வெளியிட வேண் டும்.

அத்துடன் இந்திய உளவுத்துறை அனுப்பிய வாட்ஸ்அப் செய்திகளை யார் நீக்கினார்கள் என்ற விடயங்களை யும் வெளியிடவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தாக்குதல்கள் குறித்து இந்திய புலனாய்வுப் பிரிவினர் 'தெளிவான தகவல்களை' இலங்கை யின் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கியுள்ளதாக பாராளுமன்றத்தில் பிரேமதாஸ கூறியுள்ளார்.

இந்நிலையில் தற்கொலை குண்டு தாரிகளுடன் உள்ளூர் புலனாய்வு அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்ப தாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேநேரம் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொண்டதாக பிரேம தாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உயிர்த்த ஞாயிறு குண் டுத் தாக்குதல்களுக்கு இந்தியாவின் மீது சுமத்தியுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கு மத்தியிலேயே சஜித் பிரேமதாஸவினால் கேள்விகள் எழுப் பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

### தமிழர்...

முற்றுமுழுதாக தமிழர் பிரதேசம். அதனை ஆக்கிரமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தமிழர்களுடைய பிரதேசம், சுயமான சுதேசிய தமிழ் மொழியை பேசுகின்றவர்கள் இருக்கின்றார்கள் என்பதால்தான் இந்த பகுதியை பிடுங்க நடவடிக்கை எடுக்கப்படுகின் றதோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தார். (ம-7,10)


லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(330)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பெறுகை அறிவித்தல்

**2024ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, மின்னியலாளர் சேவைகளுக்கான விலை மனுக் கோரல்**


தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 2024ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை, காவற்கடமை, சாரதி, மின்னியலாளர் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவையும் நாளாந்த பணிக்காலமும் | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02 /PC/01 | சாரதி சேவை (09 மணி.) | 02 | 365 நாட்கள் | 19,000.00 | 11.07.2024 |
| NP/14/41(15)/02 /PC/02 | சுத்திகரிப்பு சேவை (08 மணி.) | 15 | 365 நாட்கள் | 121,000.00 | 11.07.2024 |
| NP/14/41(15)/02 /PC/03 | பாதுகாப்பு சேவை (12 மணி.) | 04 | 365 நாட்கள் | 33,000.00 | 11.07.2024 |
| NP/14/41(15)/02 /PC/04 | மின்னியலாளர் (09 மணி.) | 01 | 365 நாட்கள் | 9,000.00 | 11.07.2024 |

1) சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி, மின்னிய லாளர் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 02.04.2024 தொடக்கம் 15.04.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3,000.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4) பெறுகை ஆவணங்கள் **16.04.2024ம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பா தாகக் கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்."** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகை தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதி யாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
பெறுகைக்குழு.
02.04.2024

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி அருச்சுணன்

மூதூர் திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருச்சுணன் அவர்கள் நேற்று (01.04.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடேசரத்தினம் மற்றும் துரையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் வினோதினியின் அன்புக் கணவரும் அகல்யா, கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பத்மாவதி, கண்ணகை, புஸ்பமலர், முருகுப்பிள்ளை மற்றும் கிருபராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சண்முகராசா மற்றும் நிர்மலா தேவி, கம்சினி, நகுலேஸ்வரன், நந்தீஸ்வரன், குமுதினி, நாகேஸ்வரன், மிருணாளினி, காலஞ்சென்ற லங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2024) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியா தரைவழிப்பாதை நிர்மாணப் பணி தொடர்பில் குழுவை நியமிக்குமாறு கோரிக்கை

(டில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தரை வழிப் பாலத்தினை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை சார்பில் பிரதிநிதிகள் குழுவொன்றை நியமிக்குமாறு இந்தியா, இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் தற்போது அதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா தலைமையிலான குழுவினருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கடந்த 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்கள் புதுடில்லியில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.

இதன்போதே மேற்கண்டவாறு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை இந்த தரைவழிப்பாலம் தொடர்பாக தமிழர் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் இவ்வாறு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

இந்திய, இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்ட பின்னரே இந்த பாலத்தினை அமைக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.ஆ.பிருந்தாபன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. சரவணமுத்து ஆறுமுகம்**

(ஓய்வுபெற்ற ஊழியர்-யாழ்.மாநகரசபை)
(யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

31.03.2024 அன்று காலமானார் அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-0034)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1944.06.17 — உதிர்வு 2021.04.02

அமரர்

**சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**

அப்பா!
அப்பா உந்தன் உயிர் அணுவால்
உயிர் கொடுத்து எம்மனம்
எனும் பெரு மலையை
உந்தன் உன்னத புத்தியால்
அழகிய வாழ்வியல் சிற்பமாக்கி
பவனியிலே நாம் ஜொலிக்க
அனைத்தும் ஆனவரே!
அன்றென்ன இன்றும்
நாம் ஜொலிக்க எமக்கொளி தரும்
நிலவு ஒளி நீங்கள் தானே அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(0002)

"குருந்தடிவீதி"
நீர்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
076 161 5651

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்களான திரு. வே.சிறிதரன் மற்றும் வே.கருணாகரன் ஆசிரியர்களின் அன்புத் தயார்

அமரர். திருமதி.

**தேவேந்திரன் தையல்நாயகி**

அவர்கள் 31.03.2024 அன்று காலமானார் அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(0001)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# இராசிபலன்

02. 04. 2024
பங்குனி 20, செவ்வாய்க்கிழமை
அட்டமி பிற்பகல் 3.17 மணிவரை
பூராடம் முன்னிரவு 6.43 மணிவரை

சுபநேரம் -10.40-12.10 மணிவரை
இராகுகாலம்-3.10-4.40 மணிவரை
அட்டமி -நவமி

சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவிற்கு வரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**ரிஷபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துச் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கன்னி** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புத்தி சாதூரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள் , வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** எதிர்பாராத காரியம் ஒன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், உறவினர்கள் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள்.

உதவிக்கரம்: உங்களிடம் இரண்டு கரங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட்சகோதரி அருள்மரியா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் ஏ.பி ஆர்.சௌந்தரநாயகம், தோலகட்டி ஆச்சிரம மடாதிபதி அருட்தந்தை பி.அலன் நிர்மலதாஸ், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.யூ .பிரியந்த ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவி திருமதி சி.எஸ்.றிற்றா றோசலின், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் க.கனகராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6-90)

(யாழ்ப்பாணம்)

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் முதல்வர் கணேசகுலசிங்கம் துஸ்யந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் சிவநேசன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை செந்தில் குமரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வாதரவத்தை ஜே/280 கிராம அலுவர் அசோகதாசன் சதீஸ்,கி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலய ஆசிரியர் சிவசம்பு சிவகௌரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# 'அரசறிவியலாளன்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றிய அரசறிவியல்த்துறை நடத்தும் அரசறிவியலாளன் இதழ்-6 நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அரசறிவியல் ஒன்றியத்தலைவர் சு.டிலக்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்திரனாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 80-100 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 145 | 180 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 180 | 150-200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 120 | 80-100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-140 | 180 |
| கோவா | 250 | 200 | 230 | 200 | 250 |
| கரட் | 300 | 350 | 300 | 280 | 400 |
| பூசணி | 180 | 150 | 140 | 100 | 200 |
| புடோல் | 120 | 150 | 120 | -- | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 130 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 300-400 | 150-200 | 300 |
| பெரிய வெங்காயம் | 450 | 550 | 550 | 490 | 550 |
| பாகற்காய் | 300 | 200 | 250 | 250 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 140 | 80-100 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 180-300 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 200 | 250 |
| கறிமிளகாய் | 300 | 180 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600 | 400-700 | 800 |
| போஞ்சி | 300 | 200 | 250 | 170 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | -- | -- | 160 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 200-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 120 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | 200 | 200 | -- | 100 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | [illegible] |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 | [illegible] |

# கொடுப்பனவுகளை வழங்கக் கோரி தாதியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(கரணவாய்)

மருத்துவர்களுக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி தாதியர்களினால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் 12. 30 மணி வரை இக்கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவை தமக்கு வழங்குமாறு கோரியே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் கொழும்பில் இடம்பெறும் கலந்துரையாடலில் சாதகமற்ற பதில் கிடைக்கப் பெறும் பட்சத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் பேராட்டம் தொடரும் என சுகாதார தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (நி-5-6-60)

# 20 கிலோ மாட்டிறைச்சியுடன் சந்தேக நபரொருவர் கைது

(சாவகச்சேரி)

சட்டவிரோதமாக மாட்டினை இறைச்சியாக்கிய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியில் வைத்தே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் போது சந்தேக நபரிடம் இருந்து 20கிலோ மாட்டிறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

## கொக்குவில் வாராஹி அம்பாள் ஆலய மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (நி-5-6)

# புலோலியில் வாள்வெட்டு மணிக்கட்டுடன் கைதுண்டிப்பு

(கரணவாய்)

புலோலிப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வட்டுவனை, புலோலியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் (வயது- 30) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-60)




# ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் வழங்கலும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி நூற்றாண்டு விழா மண்டபத்தில் அதிபர் இரத்தினம் ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தியின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் தங்கவேல் பாலராஜ், சிறப்பு விருந்தினராக யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவி திருமதி மணிமாறன் அநுராதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஓய்வு நிலை உப அதிபர் செ.பகீரதன் ஆற்றவுள்ளார். (நி-5-6)



யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த மாதம் 28ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வெற்றி பெற்ற இல்லத்திற்கான கேடயம் வழங்கி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வரவிருந்த கப்பலில் 764 தொன் அபாயகரமான பொருட்கள்

## அமெரிக்க பாதுகாப்பு சபை அதிர்ச்சித் தகவல்


(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் விபத்துக்குள்ளாகிய இலங்கை வந்த சிங்கப்பூர் சரக்குக் கப்பலில் 764 தொன் அபாயகரமான பொருட்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்ல முயற்சித்துள்ளதாக அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபை தகவல் வெளியிட்டுள்ளது.**

குறித்த சரக்கு கப்பலானது, கடந்த மார்ச் 26ஆம் திகதியன்று அமெரிக்க பால்டிமோர் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பெரும்பாலும் எரியக்கூடிய பொருட்கள், அபாயகரமான பொருட்கள், வெடிபொருட்கள் மற்றும் லித்தியம் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய 56 கொள்கலன்கள் ஏற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஏனைய 4,644 கொள்கலன்களில் என்ன இருந்தது என்பது இன்னும் தெரியவராதுள்ள நிலையில் இந்தக் கப்பலின் அடுத்த பயன திட்டமிடலானது கொழும்பிற்கே விடுக்கப்பட்டிருந்தது.




இதன்படி, தென்னாபிரிக்காவின் கேப் ஒஃப் குட் ஹோப்பைச் சுற்றி, 27 நாட்களை கடத்தி புத்தாண்டுக்குப் பின்னர் கப்பல் இலங்கையை அடைய திட்டமிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள நீர்நிலைகள் சுழியோடிகள் பாதுகாப்பற்றவை என அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.(நி-5-6)

# சூடு பிடிக்கும் இந்திய தேர்தல் களம் விஸ்வரூபமெடுக்கும் கச்சதீவு விவகாரம்

## விளக்கமளித்தார் ஜெய்சங்கர்



(டில்லி)

இந்தியா - இலங்கை இடையே கடந்த 1974 ஆம் ஆண்டு கையெழுத்தான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர விளக்கமளித்துள்ளார்.

இந்திய பாராளுமன்ற தேர்தல்கள் களம் சூடுபிடித்துள்ள நிலையில் அங்கு தற்போது கச்சதீவு விவகாரம் விஸ்வரூப மெடுத்துள்ளது.

இந்நிலையில் கச்சதீவு விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கமளித்துள்ளார்.

1974ஆம் ஆண்டு கடல் எல்லையை எங்கே வைப்பது என்று இந்தியா - இலங்கை இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது, வரையப்பட்ட எல்லையின்படி, கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# டொலரின் பெறுமதியில் மாற்றம்

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை தொடர்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

2023 ஜுன் 13 ஆம் திகதிக்கு பின்னர், டொலரின் நாணய மாற்று விகிதம் நேற்று 300 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 295.57 ரூபாவாகவும் விற்பனை விலை 305.10 ரூபாவாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

**வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்.மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் மூன்றாவது பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.**

**(படம்:-சிவசாந்தன்)**




# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி.காயத்திரி காந்தன்
அவர்களின் மாமியார்

**அமரர்.தெட்சணாமூர்த்தி திலகவதி**



2024.03.26 அன்று காலமானார்.
அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

(0004)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.



# கல்யாண மாலை



## இடமாற்ற அறிவித்தல்

*அன்பான வாடிக்கையாளர்களுக்கு*

இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிய கல்யாணமாலை அலுவலகம் 04.04.2024 வியாழக்கிழமை முதல் (தற்காலிகமாக) இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இடமாற்றத்தை முன்னிட்டு 03.04.2024 புதன்கிழமை கல்யாணமாலை அலுவலகத்துக்கு விடுமுறை என்பதை அறியத் தருகின்றோம்.




மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# பிரித்தானிய பிரதமர் கட்சி தேர்தலில் பின்னடைவை சந்திக்கும்

## சிவில் சமூக பிரசார அமைப்பின் கருத்துக் கணிப்பு



(லண்டன்)

பிரித்தானிய பாராளு மன்றத் தேர்தலில் பிரதமர் ரிசி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் தோல்வியைச் சந்திக்கும் என கருத்து கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தேர்தலில் யாருக்கு வெற்றி என்பது தொடர்பில் சிவில் சமூக பிரசார அமைப்பான "பெஸ்ட் ஃபார் பிரிட்டன்" மெகா கருத்துக் கணிப் பொன்றை நடத்தியதன் மூலமாகவே இது தெரிய வந்துள்ளது.

அதன்படி, தேர்தல் நடத் தப்பட்டால் ரிஷி சுனக் கின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடு முழுவதும் 250 எம்.பி.க்களை இழக்கும் என்றும், தொழிலாளர் கட்சி 468 இடங்களை பெற்று வெற்றி பெறும் என்றும் கூறப்படுகி றது.

அத்தோடு, பொதுத் தேர்தலில் பிரதமரின் கட்சிக்கு பெரும் பின்ன டைவு ஏற்படுமெனவும் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கருத் துக் கணிப்பில், கன்சர் வேடிவ் கட்சியைவிட 19 புள்ளிகள் முன்னிலை யுடன் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 45 வாக்குகளைப் பெற்றுள் ளதாக தெரிவிக்கப்படுகி றது. (நி-5-6)

# காசா போர் நிறுத்தத்திற்கு மீண்டும் போப் அழைப்பு

(வோஷிங்டன்)


உடனடியாக போரை நிறு த்தி அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் விடு விக்க வேண்டும் என போப் பிரா ன்சிஸ் காசாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார். ஈஸ்டர் பண் டிகை விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, "காசா விற்கு மனிதாபிமான ரீதியி லான உதவியை உறுதி செய்ய வேண்டும். கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி கைப்பற்றப்பட்ட பணயக்கைதிகளை உடனடி யாக விடுவிக்க வேண்டும்.

உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என மீண் டும் ஒருமுறை அழைப்பு விடுக் கிறேன். அந்த போர்க்களங் களில் குழந்தைகள் புன்ன கைக்க மறந்துவிட்டார்கள். இது வருத் தத்திற்குரிய விடயமாகும். எனவே போரை நிறுத்துமாறு நான் காசாவிற்கு அழைப்பு விடுக்கின்றேன். என தெரிவித் துள்ளார். (நி-5-6)



# ஒரே நேரத்தில் ஏவப்பட்ட 23 செயற்கைக்கோள்கள்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் விண் வெளி ஆய்வு நிறுவனம் ஒரே நேரத்தில் 23 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களை ஏவியு ள்ளது.

அத்தோடு, குறித்த செயற் கைக்கோள்கள் அனைத்தும் வெற்றிகரமாக அதன் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட் டுள்ளன.

மேலும், இதற்காக புளோ ரிடாவின் கேப் கனாவெரல் விண்வெளி ஏவுதளத்தில் இரு ந்து பால்கன்-9 வகை ரொக் கெட் ஏவப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அதேவேளை, இந்த செயற் கைக்கோள்கள் அனைத் தும் நம்பமுடியாத அளவுக்கு அதிவேக பிராட்பேண்ட் இணையத்தை வழங்கும் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது. (நி-5-6)

# அருணாச்சல பிரதேசத்தின் 30 இடங்களின் பெயரை மாற்றி அறிவித்த சீனா

(பீஜிங்)

இந்தியாவின் அருணாச் சலப் பிரதேசம் மீது உரிமை கோரி வரும் சீனா, அம்மா நிலத்தின் 30 இடங்களின் பெயரை மாற்றி அறிவித்துள் ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தை சீனா தங்கள் நாட்டின் பகுதி என உரிமை கோரி வருகிறது. அருணாச் சலப் பிரதேசத்தை மையப்ப டுத்தி அவ்வப்போது ஏதாவது கருத்துகளை வெளியிட்டு, இந் தியாவுடன் சீண்டலில் ஈடுப டுவதை அந்நாடு வாடிக்கை யாக வைத்துள்ளது.

அந்த வரிசையில் தற்போது அருணாச்சலப் பிரதேசத்தின் 30 இடங்களுக்கு சீனா மறுபெயர் சூட்டி அறிவித்துள் ளது சர்ச்சையைக் கிளப்பி யுள்ளது. நிர்வாகப் பிரிவுகளை நிறுவுவதற்கும், பெயரிடுவதற் கும் பொறுப்பான சீனாவின் சிவில் விவகார அமைச்சகம், அருணாச்சல பிரதேசத்தின் மறு பெயரிடப்பட்ட பகுதிகள் என குறிப்பிட்டு நான்காவது பட்டியலை வெளியிட்டுள்ளதாக சீன ஊடகங்கள் தெரிவித்துள் ளன. அருணாச்சலப் பிரதேச த்தை அந்நாடு "ஜாங்னான" என்ற பெயரில் அழைத்து வருகிறது.

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பகுதிகளுக்கு சீனா இத ற்கு முன்பு 3 முறை மறு பெயர் வைத்து பட்டியலை வெளியிட் டுள்ளது. 2017ல் வெளியிட்ட முதல் பட்டியலில் 6 இடங்களு க்கும், 2021ஆம் ஆண்டில் 15 இடங்களுக்கும் மறு பெயரிட்டு இரண்டாவது பட்டியலையும் 20 23ஆம் ஆண்டில் 11 இடங்களு க்கான பெயர்களுடன் 3 ஆவது பட்டியலையும் வெளியிட்டது.

அருணாச்சலப் பிரதேசத் தில் உள்ள இடங்களை மறு பெயரிடுவதற்கான சீனாவின் நடவடிக்கையை இந்தியா பல முறை நிராகரித்துள்ளது. அந்த மாநிலம் இந்தியாவின் ஒருங் கிணைந்த பகுதி என்றும், புதிய பெயர்களை வைப்பது, நிஜத்தை மாற்றாது எனவும் இந்தியா ஏற்கெனவே தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# நெதன்ய

# இஸ்ரே

## ○ பொருட்க

## ○ போராட்ட

(காசா)

**இஸ்ரேல் பிரதம குவை பதவி வி போராட்டம் ஒன்**



(சனா)

ஹவுதியின் இரண்டு ட்ரோன்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியுள்ளது.

செங்கடல் வழியாக செல் லும் வெளிநாட்டு வணிகக் கப்பல்கள் மீது ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சிக்குழு தாக்குதல் நடத்தி வருகிறது. ஆளில்லா விமானங்கள் மூலம் கப் பல்களை குறிவைத்து தாக் குகிறது.

இதனை எதிர்க்கும் வகையில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள் ளிட்ட பல நாடுகள் ஒன் றிணைந்து செங்கடலில் ஹவுதி கிளர்ச்சி குழுதாக் குதலை எதிர் கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் ஹவு தியின் இரண்டு ட்ரோன்

# சொ

# சுட்

களை சுட்

அமெரிக்க இ

வித்துள்ளது

ஒரு ட்

லில் பறந்

சுட்டு வீழ்த்

மற்றொரு

தலுக்கு புற

இருந்தபோ

தப்பட்டதாக

தெரிவித்து

காசா

தாக்குதல்

தற்கு எதிர்

கடந்த நவ

இருந்து ஹ

யாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன்யாகுவை பதவி விலகக்கோரி ...ரேல் மக்கள் போராட்டம்


## ...நட்களுக்கு தீ வைப்பு ...ரட்டக்காரர்கள் 16 பேர் கைது

...பிரதமர் பெஞ்சமின் நெதன்யா ...வி விலகக்கோரி மக்கள் பாரிய ...ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.




இஸ்ரேல் - ஹமாஸ் போரானது 6 ஆவது மாதத்தை நெருங்கி வரும் நிலையில் டெல்அவிவ், ஜெருசலேம், சிசேரியா ரானானா, ஹெர்ஸ்லியா ஆகிய நகரங்களில் கடந்த சனிக்கிழமை ஆயிரக் கணக்கானோர் சாலைகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காசாவில் உள்ள அனைத்து பணயக் கைதிகளையும் மீட்டு கொண்டுவரக் கோரியும், பிரதமர் நெதன்யாகு பதவி விலகக்கோரியும் கோஷங்களை எழுப்பியதோடு பொதுத் தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக சென்று, அரசு அலுவலகங்களை முற்றுகையிட



முயன்ற நிலையில், பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஜெருசலேமில், பிரதமர் நெதன்யாகு வீட்டுக்கு முன்பு ஏராளமானோர் திரண்டு போராட்டம் நடத்தியதோடு பணயக்கைதிகளை மீட்க பிரதமர் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

போராட்டக்காரர்கள் வீதியில் பொருட்களை போட்டு தீவைத்து கொளுத்தியதால் இஸ்ரேலில் பரபரப்பு நிலவியது.

டெல்அவிவில் நேற்று முன்தினம் அதிகாலை போராட்டம் முடிவுக்கு வந்ததாகவும், 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6)

## செங்கடலில் ஹவுதி ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா

களை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரு ட்ரோன் செங்கடலில் பறந்து சென்றபோது சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், மற்றொரு ட்ரோன் தாக்குதலுக்கு புறப்படத் தயாராக இருந்தபோது சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் செல்



லும் வணிக கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சிவப்பு கம்பளம் பயன்படுத்த பாகிஸ்தான் அரசு தடை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் தேவையற்ற செலவுகளை குறைப்பதற்கு அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி அரசு நிகழ்ச்சிகளில் சிவப்புக் கம்பளங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் வருகையின் போது, சிவப்புக் கம்பளங்கள் பயன்படுத்தப்படுவது இனி நிறுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஷெரீப்பின் உத்தரவுக்கமைய இத்தடை அமுலுக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அரசு நடைமுறையின்படி வெளிநாட்டு தலைவர்கள் வருகையின்போது, சிவப்புக் கம்பளங்கள் பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தானின் பொருளாதார மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பிரதமர் மற்றும் அமைச்சவை உறுப்பினர்கள் தங்களுடைய சம்பளம் மற்றும் பிற பலன்களை விருப்பத்துடன் விட்டுக்கொடுப்பதாக கடந்த வாரம் முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானில், செலவீனங்களை குறைக்கும் நோக்கத்துடன் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளத்தில் பாய்ந்த ஜீப் 10 பேர் காயம்

(பண்டாரவளை)

ஜீப் வண்டியொன்று பண்டாரவளையில் இருந்து ரம்புக்கனை நோக்கி பயணித்தபோது கம்பளை தெல்பிடிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி சுமார் 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஜீப் வண்டியில் 15 பேர் பயணம் செய்திருந்த நிலையில் அவர்களில் 10 பேர் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் இடம்பெற்ற மரண வீட்டில் கலந்து கொண்டு திரும்பிய குழுவினர் பயணித்த ஜீப் வண்டியே நேற்று அதிகாலை 4 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஐ.நா அபிவிருத்தி திட்டம்-தேசிய மக்கள் சக்தி சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தமது செயற்றிட்டங்கள் பற்றி தேசிய மக்கள் சக்திக்கு தெளிவுபடுத்திய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி நிதிகள், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் உக்கிரமடைந்துள்ள வறுமை உள்ளிட்ட சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தியதுடன், அவர்களது அறிக்கையில் இது குறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினர்.

இந்தச் சந்திப்பின் போது குறித்த செயற்றிட்டத்துக்கான இலங்கை வதிவிட பிரதிநிதி அஸூசா குபோடா கொள்கை நிபுணரான சந்திரிக்கா கருணாரத்ன, ஊடக நிபுணர் சத்துரங்க ஹபு ஆரச்சி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தேசிய நிறை வேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6)

# சுமார் 50 இலங்கையர்கள் மியன்மாரில் தடுத்து வைப்பு

## லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

"மியன்மாரில் சைபர் குற்ற வலயத்தில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என எதிர்க்கட்சி கோரிக்கை முன்வைத்துள்ளது.



இதேவேளை அரசாங்கம் இந்த விடயத்தில் அசமந்த போக்குடன் செயற்படுவதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

இது குறித்து லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளதாவது,

50 இற்கு மேற்பட்ட இலங்கைய இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு சென்று மியன்மாரில் சைபர் குற்றவலயத்தில பலவந்தமாக தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் இடம்பெற்று சுமார் 4 மாத காலம் கடந்துள்ளது. இலங்கையர்கள் அங்கு எதிர்கொண்டுள்ள இன்னல்கள் தொடர்பில் நாளாந்தம் ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

இணைய குற்றச்செயல்களுக்கு அவர்கள் அங்கு பலவந்தமாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீடு செய்து அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனென்றால் இந்த விடயத்தில் அரசாங்கம் அசமந்த போக்குடன் செயற்படுவதாகவே தெரிகிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# இன்று ஒரு தகவல் 83



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பல்

சில பேரை முறுக்கு 'சாப்பிடுறீங்களா' என்று கேட்டால் கோபம் வந்து விடும்! என்ன காரணம் ?

அவர்களுக்கு பல்லு ஆட்டம் கொடுத்துப் போய் விட்டது என்று அர்த்தம். பல்லு சரியில்லை என்றால் முறுக்கையும் சீடையையும் எப்படிக் கடிக்க முடியும்!

முடியாதைக் கேட்டால் கோபம் வராமல் என்ன செய்யும்!

ஆனாலும் ஒரு சௌகரியம்... இவர்கள் எல்லாம் கோபத்தை முகத்திலே காட்டுவார்களே தவிர... அதற்காக பல்லை நறநற என்று கடித்துக்கொண்டு இருக்க மாட்டார்கள்!

கடித்தால்... இன்னமும் வலிக்க ஆரம்பித்து விடும்! இவ்வளவு கஷ்டமும் எதனாலே?

பல்லை சரியாக கவனிக்காததினாலே தான்! பல்லுக்குகெடுதல்செய்கின்றவிரோதிவெளியிலே இல்லை! உள்ளுக்குள்ளேயே தான் இருக்கின்றது!

நமது வாய்க்குள்ளே 200 இல் இருந்து 300 வகையான பக்றீறியாக் கிருமிகள் வாடகை ஏதும் கொடுக்காமலே வாசம் செய்து கொண்டு இருக்கின்றது! சும்மா இல்லை.

இதிலே சிலது நமக்கு உதவி தான் செய்கின்றது! உபத்திரம் செய்வதில்லை. உடம்பிலே விற்றமின் உண்டாகுவதுக்கு சில கிருமிகள் ஒத்தாசை செய்கின்றது.

நாம் சாப்பிடுகின்ற சாப்பாடு ஜீரணம் ஆகுவற்கு சிலது உதவி செய்கின்றது. தொண்டை குழாயிலே நோய் வராமல் தடுப்பதற்கு சிலது உதவுகிறது!

உதவி செய்வதற்கு என்று சில பேர்! அதே மாதிரி உபத்திரம் செய்வதற்கு என்று சில பேர்!

பல்லு, தொண்டைக் குழாய், குடல் இதற்கெல்லாம் கெடுதல் செய்யக்கூடிய பக்றீறியா கிருமிகளும் நமது வாய்க்குள்ளே இருக்கின்றது. இது எல்லாம் சாதாரண கண்ணுக்கு தெரியாது!

ஒரு நாளைக்கு நமது வாயிலே ஒரு காலன் எச்சில் உற்பத்தி ஆகுகின்றதாம். இது பல்லை தொடர்ந்து சுத்தப்படுத்திக் கொண்டே இருக்கும்.

பல்லிலே வலி இல்லை என்பதனாலே பல்லிலே நோய் இல்லை என்று நினைத்து விடாதீர்கள் என்றார் ஒரு டொக்டர். அது எல்லாம் இருக்கட்டும் பல்லை பாதுகாப்பதற்கு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள் இது தானே உங்கள் கேள்வி!

வழி இருக்கின்றது. பல் வைத்திய நிபுணர்கள் சில குறிப்புக்கள் கொடுத்து இருக்கின்றார்கள். சொல்லுறேன் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்!

ஒவ்வொரு தடவை சாப்பிட்ட பிறகும் நன்றாக பல்லை துலக்க வேண்டுமாம். பல்லுக்கு இடையில் உணவுப் பொருட்கள் தங்காமல் பார்த்துக் கொள்ளுமாம்.

வேளைக்கு ஒரு தடவை துலக்கணுமா என்கிறார்கள் நம்மிலே சில பேர். ஒரு நாளைக்கு ஒரு தடவை விளக்கினால் போதாதா?

ஃப்ளோரைடு உள்ள பற்பசையை உபயோகப்படுத்தினால் பல் எனாமல் உறுதியாகுமாம்! அமிலத் தாக்குதல்களிருந்து பல்லைப் பாதுகாக்கலாமாம்!

பல் சொத்தையாகி ஆழமான குழிகள் ஏற்படும் போது ஆரம்பத்திலே வலி எற்படுவது இல்லையாம்! அது தான் வலிக்கவில்லையே என்று அலட்சியமாக இருந்து விடக்கூடாது! டொக்டரிடம் போக வேண்டும்.

இனிப்பு அதிகமாக சாப்பிடக்கூடாது! குறைத்துக் கொள்ள வேண்டும்! சாப்பிடுகின்ற நேரம் போக இடைவெளிகளிலே எதையாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கக் கூடாது! இதையெல்லாம் முடிந்தால் விட்டுவிடவேண்டும். இல்லை என்றால் குறைத்துக் கொள்ள வேண்டும்.

சக்கரைப் பொருள் எதையாவது சாப்பிட்டால் உடனே பல்லைத் துலக்க வேண்டியது அவசியம்! இது எல்லாம் நம்மால் முடியாத காரியம் தான். கொஞ்சம் அக்கறை வேண்டும். அவ்வளவு தான்.

இந்தக் காலத்திலே பல பேருக்கு வாய் நீளம் என்று சொல்லுகின்றோம் அல்லவா! அது போல அந்தக் காலத்திலே மனிதனுக்குப் பல்லு நீளம்! நிஜமாகவே நீளம்.

ஒரு லட்சம் வருடத்திற்கு முன்பு இருந்த நம் முன்னோர்களுக்கு பல் எல்லாம் ரொம்ப நீளமாக இருந்ததாம். அப்போது இருந்த நீளத்திலே பாதி அளவு தான் இப்போது நமக்கு இருக்கின்றதாம்.1000 வருடத்திற்கு 1 சதவீதம் என்ற அளவிலே நீளம் குறைந்து கொண்டே போகின்றதாம். இப்படியே போய் ஒரு காலத்திலே மனிதனுக்கு பல்லே இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றார்கள்! பல்லில்லாத மனிதனைப் பார்ப்பதற்கு இன்னமும் ஒரு லட்சம் வருடத்திற்கு மேலே ஆகும்! இருந்தாலும் நாம் பல்லை கவனிக்கின்ற விதத்தைப் பார்த்தால் அந்தக் காலம் சீக்கிரமாக வந்து விடும் போல இருக்கின்றது!

பல்லு போய்விட்டது என்றால் சொல்லு போய்விட்டது சார்!அவ்வளவுதான். இப்போது ஒருவரிடம் போய் பத்து ரூபாய் கைமாத்து கேட்பது என்றால் கூட பல்லைத்தான் காட்ட வேண்டியிருக்கின்றது. ஒருத்தர் சிரித்தால் அதை முல்லைப்பூ சிரிப்பு என்று வர்ணிக்கின்றோமே! எதனாலே?

பல்லு பளிச்சென்று அழகாக இருக்கிறது என்று அர்த்தம். ஒருவர் சிரிக்கிறார் என்பதை தெளிவாக அடையாளம் காட்டுவதே பல்லு தான். பல்லு இல்லை என்றால் அவர் சிரிக்கிறாரா! அழுகின்றாரா! என்று கண்டுபிடிப்பதே கஷ்டம்.

இதையெல்லாம் செயன்முறையால் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்! சார் இதற்கு மேல் எல்லாம் நான் பேசிக் கொண்டு போனால் பல பேர் கோபம் என் மேலே திரும்பும். அதனுடைய பலன் எப்படி ஆகும் தெரியுமா? அதன் பிறகு...

நான் சிரிக்கின்றேனா அழுகின்றேனா என்று கண்டுபிடிக்கிறது உங்களுக்கு பெரிய கஷ்டமாகப் போய்விடும்!

சில பேர் பல் உறுதியைக் காட்டுவதற்காக ஒரு பெரிய காரிலே கயிற்றை கட்டி அதை பல்லாலே கடித்து இழுத்துக்காட்டி சாதனை செய்வது உண்டு. அப்படி நம்ம ஆளு ஒருவர் சாதனை செய்தார். மறுநாள் அவரை ஒருவர் சந்தித்தார் "என்ன சார் பேருந்தை கயிற்றாலே கட்டி அதை பல்லாலே கடித்து இழுத்தீங்களாமே! வந்துதா?" என்றார். "வந்தது" என்றார் எது பேருந்தா? என்று கேட்டார் அவர். இல்லை! பல் - என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வாய்க்கால் வீதி புனரமைப்பினை துரிதப்படுத்துங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

சேதமடைந்த வீதியினை பார்வையிட வரும் அரசியல் வாதிகள் அதிகாரிகளினால் எந்தவித பயன்களும் ஏற்படப் போவதில்லை என முல் லைத் தீவின் மாத்தளன், அம்பல வன்பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய கிராமங்களின் மக் கள் கவலை தெரிவிக்கின்ற னர்.

போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகள் கடந்த நிலை யிலும் இரட்டைவாய்க்கால் தொடக்கம் சாலை வரை யான 11 கிலோ மீற்றர் வீதி யினை புனரமைப் பது தொடர்பிலான கோரிக்கை களை முன் வைத்தும் எவ்வித நடவடிக்கைகளும் அதிகாரிக ளால் முன்னெடுக்கப்படவில்லை.

குறித்த வீதியின்னை பயன் படுத்தி வலைஞர்மடம் பாட சாலை, அம்பலவன் பொக் கணை பாடசாலை, மாத்த ளன் பாடசாலை ஆகிய பாடசாலை கள் உள்ளன. இப்பகுதியில் 450 இற்கு மேற்பட்ட குடும்ப ங்கள் வாழ்கின்றன.

எனவே இது தொடர்பில் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் இனியா வது கரிசணை செலுத்தி குறித்த வீதியினை புனரமைக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-350)



பல வருடங்களாக நடைபெறாமாலிருந்த செம்மலை மாணிக்கப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலையின் வகுப்புக்கள் மீளவும் நேற்று முன்தினம் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வகுப்பில் 77 மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(படம்:-கிருஷ்ணகுமார்)

# ஐயன்குள விவசாயிகள் கவனயீர்ப்பு



முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள ஐயன்கன் குளத்தின் கீழ் கடந்த 2023 சிறுபோக செய்கையின் போது விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செய்கைக்கான தண்ட அறவீட்டை நிறுத்துமாறும் அல்லது கால அவகாசம் வழங்குமாறு கோரியும் குறித்த பிரதேச கமக்கார அமைப்பை புனரமைக்குமாறு கோரி நேற்று முல்லைத்தீவு-ஐயன்குள விவசாயிகளால் துணுக்காய் கமநல சேவை நிலையம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்ட துடன் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(படம்:-யதுபாஸ்கரன்)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி இளைஞர்களால் முற்றுகை

## இருவர் கைது

(மன்னார்)


மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காயநகர் கிராம சேவை யாளர் பிரிவு ஈச்சளவக்கை கிராமத்தின் காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் இளைஞர்களால் முற்றுகையிடப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

ஈச்சளவக்கை கிராம இளை ஞர்கள் ஆறுபேர் மற்றும் ஊடகவியலாளர் ஒருவரு வரும் இணைந்து நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் குளத்தின் வாய்க் கால் பகுதியில் இறங்கி தேடு தல் நடவடிக்கையை முன் னெடுத்த வேளை கசிப்பு உற்பத்தியாளர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த குழுவினரால் மீட்கப்பட்ட சட்ட விரோத மதுபானங்கள் அடம் பன் பொலிஸாரிடம் கையளி க்கப்பட்டது. (நி-5-6-285)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3078

### தர்ஷிகா





### கனுசிகா




### யூலி




### விஜி




### உதயா




### சரணியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 444





சூறாவளி சுழன்று அடிக்கும் போது காடுகளின் மரங்கள் படும்பாடு அந்த யானையின் வேகத்தினால் பட்டன. சடசடவென்று மரங்களும் மரக்கிளைகளும் சரிந்து விழுந்தன. பூமி அதிர்ந்தது, எட்டுத் திக்குகளும் நடுநடுங்கின. மரங்களின் மீதிருந்த பறவை இனங்கள் சிறகுகளைச் சடசடவென்று அடித்துக்கொண்டும் பீதி கொண்ட குரலில் கூவிக் கொண்டும் பறந்தன. காட்டில் மறைந்து வாழ்ந்த மிருகங்கள் வெளிப் புறப்பட்டு நாலா புறமும் விழுந்தடித்து ஓடின.

"ஐயையோ! யானைக்கு மதம் பிடித்துவிட்டது போலிருக்கிறதே! இது என்ன விபரீதம்!" என்று சேனாதிபதி பூதிவிக்கிரமகேசரி கூவினார்.

இவ்வளவு தூரம் இளவரசர் சொல்லியிருந்ததும் பூங்குழலியின் உள்ளமும் திகில் அடைந்தது. அவள் முகத்தில் பயப் பிராந்தியின் அறிகுறி தோன்றியது.

பூங்குழலி ஒரு பெரிய பயங்கரமான பிரம்மாண்டமான கடல் சுழலில் அகப்பட்டுக் கொண்டாள். அதே சுழலில் அகப்பட்டுக் கொண்டு இளவரசரும் சுற்றிச் சுற்றி வந்தார். யானையும் அப்படியே சுழன்று சுழன்று வந்தது. பூங்குழலி கண்களை இறுக மூடிக் கொண்டாள். புயல் காற்றினால் தள்ளப்பட்டு ஓடும் கரிய மேகத்தைப் போல் யானை போய்க் கொண்டேயிருந்தது. கடைசியில் யானை இறவுத்துறையை அடைந்தது.

அங்கே இலங்கைத்தீவின் கீழ்ப்புறத்துக் கடலும் மேற்புறத்துக் கடலும் ஒன்றாய்ச் சேர்ந்தன. அந்த ஜலசந்தியின் மிகக் குறுகலான இடத்துக்கு தான் யானை இறவு என்று பெயர். இலங்கைத் தீவின் வடபகுதியையும் மத்தியப் பகுதியையும் ஒன்று சேர்ந்த அக்கடல் துறையில் யானை இறங்கியது. அனுமார் தூக்கி எரிந்த மலை கடலில் விழுந்தது போல விழுந்தது.

### நாற்பத்தைந்தாம் அத்தியாயம்
### சிறைக் கப்பல்


கண்மூடிக்கண் திறக்கும் நேரத்தில் 'யானை இறவு' என்னும் கடல் துறை பின்னுக்குச் சென்றது. பின்னர், கானகத்து மரங்கள் பின்னோக்கி ஓடின. வானத்துப் பறவைகள் பின் நோக்கிப் பறந்தன. ஓடைகள், குளங்கள், ஊர்ப்புறங்கள், கோயில்கள், மண்டபங்கள் எல்லாம் பின்னோக்கிப் பாய்ந்து மறைந்தன. மான் கூட்டம் ஒன்று அந்த யானையுடன் சிறிது தூரம் போட்டியிட்டு ஓடப் பார்த்தது. மான்களும் தோல்வியடைந்து பின்தங்கின. யானை மட்டும் முன்னால் முன்னால் போய்க் கொண்டிருந்தது. எத்தனை தூரம், எத்தனை நேரம் என்றெல்லாம் பூங்குழலிக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இன்னமும் ஈழ நாட்டிலே தான் இந்த யானை போய்க் கொண்டிருக்கிறதா என்று மட்டும் பூங்குழலிக்கு வியப்பாயிருந்தது.

இத்தனை நேரம் அந்தத் தீவை மூன்று தடவை கடந்து போயிருக்கலாமே? இல்லை, இல்லை! இந்த யானை ஈழ நாட்டைக் கடந்து செல்லவில்லை. பூலோகத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. பூலோகத்தின் தென் முனையிலிருந்து வட முனைக்குப் போய்க் கொண்டிருக்கிறது! இதன் முதுகில் ஏறிக் கொண்டு நானும் பூமியைப் பிரதட்சணம் செய்கிறேன். நான் மட்டுமா? இளவரசருந்தான்!

முதலில், யானை மதம் பிடித்து ஓடத் தொடங்கியதும், பூங்குழலிக்குக் கொஞ்சம் பயமாய்த் தானிருந்தது. பயத்துடன், என்ன நிகழ்கின்றது என்று தெரியாத தயக்கமும் இருந்தது. இரண்டு மூன்று தடவை இளவரசர் அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிந்தார். பின்னர் அவளுடைய பயமும் தயக்கமும் மறைந்தன. எல்லையற்ற உற்சாகம் அவளை ஆட்கொண்டது. கொஞ்ச நேரம் வரை இப் பூவுலகில் ஒரு மத்தகஜத்தின் மீது ஏறிச் சென்றாள். திடீரென்று எப்படியோ சொர்க்கத்துக்குப் போய் விட்டாள். சொர்க்கத்தில் தேவேந்திரனுடைய ஐராவதத்தின் பேரில் அவள் வீற்றிருந்தாள். ஐராவதம் வான வீதிகளில் ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. கற்பக விருட்சங்கள் அவள் மீது சுகந்த மலர்களைப் பொழிந்தன. (தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## குணம் மாறாத செல்வந்தன்



முன்னொரு காலத்தில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அளவு கடந்த செல்வம் இருந்தும் ஒருவருக்கும் ஒரு பொருளையும் கொடுக்க மாட்டான். யாராவது வறியவர் அவனை நாடி வந்தால் யாரிடமும் எதையும் கேட்கக்கூடாது, யாருக்கும் எதையும் கொடுக்கக்கூடாது என்று நான் ஒரு கொள்கை வைத்திருக்கிறேன். சும்மா என்னை தொந்திரவு செய்யாதே! போ... போ... என்று விரட்டி விடுவான்.

தன்னிடம் வேலை செய்யும் பணியாளர்களை மிகக் கடுமையாக வேலை வாங்கி விட்டு மிகக் குறைந்த ஊதியத்தையே அவர்களுக்கு வழங்குவான். இப்படி ஒரு விதத்திலும் எந்த நற்செயலும் புரியாமல் சுயநலத்துடன் வாழ்ந்தான். காலங்கள் உருண்டோடின. செல்வந்தன் கிழப்பருவமெய்தி மரணமடைந்தான்.

அன்பில்லாத அவனை அடக்கம் செய்த இடத்தில் ஒரு புல் பூண்டுகூட முளைக்கவில்லை. அவன் செய்த தீய செயல்களின் பயனாக அவன் நரகத்தில் உலாவ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நரகத்திலும் "பாழ் நரகக் குழி" என்ற இடத்தில் மிகமிகப் பாவம் செய்த ஆத்மாக்களுடன் கிடக்க நேர்ந்தது. அதன் கொடுமை தாங்காமல் "இறைவா, என்னை மன்னித்துவிடு!" என்று கண்ணீர் விட்டு மன்றாடினான்.

இதைக்கண்ட தர்மதேவதை, அவன் மேல் இரக்கப்பட்டு, அவனை அக்குழியிலிருந்து மேலே கொண்டுவர எண்ணியது. அவன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நற்செயலையாவது செய்திருப்பானா? என நினைத்தது. ஆம்! அவனும் தன்னையும் அறியாமல் ஒரே ஒரு நற்செயல் செய்திருந்தான்!

அது என்னவென்றால் அவன் ஒரு சமயம் நடந்து செல்லும்பொழுது வழியில் ஒரு சிறு சிலந்திப் பூச்சியைத் தரையில் கண்டான். அதை மிதிக்காமல் தன் காலை எட்டி வைத்து நடந்தான்.

அவனை அறியாமல் செய்த அந்த நற்செயலின் பலனை அவனுக்கு வழங்க தர்மதேவதை முடிவு செய்தது. தர்மதேவதையின் கையில் உடனே ஒரு சிலந்தி தோன்றியது. அது தன் வாயிலிருந்து நூல் போன்ற பொருளை உமிழ்ந்து அந்த நரகக் குழிக்குள் செலுத்தியது.

தர்மதேவதை அந்தக் கொடியவனை அழைத்து, "இந்த நூலைப்பிடித்து, நீ மேலேறி வந்தால், இந்தக் குழியிலிருந்து வெளியேறிவிடலாம்!" என்றது.

"இந்தச் சிலந்தியின் நூல் எப்படி என் எடையைத் தாங்கும்?" என்று கேட்டான் அவன். "முயற்சி செய்துதான் பாரேன்!" என்றது தர்மதேவதை.

அதன்படியே அவன் முயற்சி செய்ய என்ன அதிசயம்! அவன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறி வந்து கொண்டிருந்தான். இப்படி அவன் பாதி தொலைவு ஏறி வந்து கொண்டிருக்கும் பொழுது தன் காலுக்கடியில் மேலும் சிலரும் அந்த சிலந்தியின் நூலைப் பிடித்துக்கொண்டு ஏறி வருவதைக் கண்டான். அவனுக்கு உடனே கோபம் தலைக்கேறியது.

"அடேய்! பாவிகளா! இது நான் மட்டுமே ஏற வேண்டிய நூல்! நீங்கள் ஒருவரும் ஏறக்கூடாது!" என்று கூறியபடியே பொறாமையாலும் சுயநலத்தாலும் தன் காலுக்குக் கீழே தொங்கிய அந்தச் சிலந்தி நூலை அறுத்து எறிந்தான். அதைப் பிடித்து ஏறத் தொடங்கியோர் அனைவரும் மீண்டும் பாதாளத்தில் வீழ்ந்தனர்.

அந்தோ பரிதாபம்! நரகத்திலும் மனம் திருந்தாத அவன் துர்குணத்தால் அவன் பிடித்திருந்த நூல் முழுவதுமாக அறுந்து அவன் மீண்டும் அந்தக் குழிக்குள்ளேயே வீழ்ந்தான்! தர்மதேவதை உடனே மறைந்து போனது! சிலந்தியும் தான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தாற் செயின்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமாயணத்தில் - வாலி வதம் மகாபாரதத்தில் - துரோணர் வதம்

இராமாயணம், மகாபாரதம் இரண்டும் இதிகாசங்கள். இதிகாச புராணங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்காக எழுதப்பட்டவை. அவை நிஜமானவையா? என்ற விவாதம் பயனற்றது.

மாறாக, அவ்விரண்டு இதிகாசங்களும் கூறுவன யாவை என்றறிவதே அறிவுடைமையாகும்.

அந்த வகையில், இராமாயணமும் மகாபாரதமும் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக்கூடாது என்பதையும் சமயோசிதம் என்பதன் பொருள், மதிநுட்பத்தின் அவசியம் என்பன உள்ளிட்ட வாழ்வியலுக்குத் தேவையான ஏகப்பட்ட விடயங்களை நமக்குப் போதித்து நிற்கிறது.

இதில் சமயோசிதம் மற்றும் சந்தர்ப்ப சூழலைப் பயன்படுத்துதல் என்பதை இராமாயணத்தில் வருகின்ற வாலி வதமும் குருசேத்திரத்தில் அசுவத்தாமா இறந்தது மெய்யே என்று தருமர் உரைத்ததன் மூலம் நடந்த துரோணர் வதமும் முதன்மையான எடுத்துக்காட்டுகள்.

ஆம், வாலி வதத்தில் இராமபிரான் மறைந்திருந்து வாலியைத் தாக்குகிறார். மறைந்திருந்து தாக்குவது போர் அறமன்று. அதிலும் அவதார புருஷராகிய இராமபிரான் அதைச் செய்தலாகாது.

இருந்தும் வாலி வதத்தில் இராமர் மறைந்திருந்து தாக்குதல் நடத்தி, வாலியைக் கொல்கிறார். போர் அறம் கருதி இராமர் அதைச் செய்யாதிருப்பின் இராமாயணக் கதை மாறியிருக்கும். வாலி இராமனை வதம் செய்திருப்பான்.

எனவே சந்தர்ப்ப சூழ்நிலையில் மறைந்திருந்து தாக்குவது தவிர்க்க முடியாததாகின்றது.

இதுபோல மகாபாரதத்தில் குருசேத்திரப் போர் நடக்கிறது. துரோணரை வெல்வதாயின் அவரை புத்திரசோகத்துக்கு ஆளாக்க வேண்டும். எனவே துரோணரின் மகன் அசுவத்தாமா போர்க்களத்தில் உயிரிழந்ததாகத் தகவல் அனுப்பப்படுகிறது.

தகவலை உறுதி செய்ய துரோணர் முற்படுகிறார். தருமர் பொய் உரைக்க மாட்டார் என்ற அடிப்படையில், துரோணர் தருமரை விசாரிக்க ஆள் அனுப்பி வைத்தார்.

தருமரோ போர்க்களத்தில் அசுவத்தாமா என்ற யானை இறந்ததைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு; அசுவத்தாமா இறந்தது மெய்யே என்று எதிர்முனையில் நிற்கும் துரோணருக்குக் கேட்கும் வகையில் உரத்த குரலிலும் யானை என்பதை மிக மெதுவாகவும் கூறுகிறார்.

அவ்வளவுதான் தன் மகன் இறந்து விட்டான் என நம்பிய துரோணர் தன்னிலை இழக்க, போர்க்களத்தில் அவர் வதம் செய்யப்படுகிறார்.

தன் குருவாகிய துரோணருக்கு தருமர் பொய் உரைத்தது தகுமா? என்று வாதம் செய்வோர் உளர்.

என் செய்வது அதர்மம் தோற்கடிக்கப்பட வேண்டுமாயின் அங்கு பொய் உரைப்பது தான் உபாயமாகிறது.

மேற்குறித்த இரண்டு சம்பவங்களையும் நாம் கற்றறிந்தால், தமிழினம் வெல்வதற்கும் இதிகாச உபாயமே மருந்தென உணர்தல் வேண்டும்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு எங்களின் உரிமையை வென்றெடுக்க நாம் வியூகம் அமைக்க வேண்டும். இதை நம் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டால் அது நன்மை தரும்.

# வெடுக்குநாறி மலை சம்பவம் குறித்து கவலை வெளியிட்ட பௌத்த துறவிகள்

**(கொழும்பு)**

**மார்ச் 8, 2024 அன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் அனுட்டிக்கப்பட்ட மகாசிவராத்திரி விரத நாளன்று பாதுகாப்பு படையினர் பக்தர்களுக்கு உணவு, நீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் வழங்கப்படுவதைத் தடுத்தது மட்டுமல்லாது கோவில் அர்ச்சகர்கள் உட்பட பக்தர்களை அவமானப்படுத்தும் வகையில் அகற்றித் தடுப்புக்காவலில் வைக்குமளவுக்கு மிக மோசமாக நடந்துகொண்ட சம்பவம் குறித்து (பௌத்த துறவிகளின்) சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியன ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் அண்மையில் நடந்தவை பற்றிய, சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகை தமிழர் பேரவையின் இணை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழும் மக்களின் பல நூற்றாண்டுக் கலாசாரப் பண்பாடுகளையும் நடைமுறைகளையும் அழித்துவிட்டு பெரும்பான்மையினரின் அடையாளங்களையும் நடைமுறைகளையும் திணிக்கும் அரசின் அகன்ற திட்டம் சிறுபான்மைச் சமூகங்களிடையே அச்சத்தையும் சந்தேகங்களையும் தோற்றுவிக்கிறது என்ற வரலாற்றை நாம் அறிந்துள்ளோம்.

இதைச் சாதிக்க தொல்லியல் திணைக்களம் ஒரு கருவியாகப் பாவிக்கப்படுகின்றது. பல ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் சாமப் பூஜைக்கான அனுமதி வழங்கப்பட்டதா இல்லையா என்ற விடயத்தில் முரண்பாடான தீர்மானங்களை எடுப்பதற்கு நீதிமன்றங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இங்கு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த பக்தர்கள் அவமானப்படுத்தும் வகையில் முரட்டுத்தனமாகக் கையாளப்பட்டமையே.

இவ் விடயத்தில் கோவில் இருப்பிடம் சிதைக்கப்பட்டதென்பதற்கு பொலிஸார் ஆதாரம் தர முடியாமையினாலும் அக் கோவிலில் வழிபாடு செய்வதற்கான சட்டரீதியான அங்கீகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்தமையினாலும் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டமை ஆறுதல் தருவதாக உள்ளது.

பாதுகாப்பு நிர்வாகத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் கடத்தல்கள், சட்டத்திற்குப் புறம்பான தடுத்துவைப்புகள், துன்புறுத்தல்கள் பற்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் ஃபோக்கெர் ரேர்க் அளித்த வாக்குமூலத்திற்கு அமைய அவரது கரிசனைகளை மேற்கூறிய சம்பவம் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இது ஒரு அலுவலகத்தை உருவாக்கப்போகிறோம் என்பதுடன் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை எடுப்பதாக அரசு காட்டிவரும் முனைப்புக்கு எதிரானதாகவே பார்க்கப்படும்.

இலங்கையில் அனைத்து சமூகங்களின் மத்தியில் மத ஒற்றுமையை முன்னெடுக்க மன்றம் மற்றும் பேரவை எடுத்துவரும் முயற்சிகளை இப்படியான சம்பவங்கள் குலைத்துவிடுமோ என்ற அச்சமும் எங்களுக்குக் கரிசனை தருவதாக உள்ளது.

இவ்வருடப் பின்பகுதியில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சந்தர்ப்பம் நிலவும் இவ்வேளையில் வாக்குச் சேகரிப்புக்காரணமாக சில நாசகார சக்திகள் கலகத்தைத் தூண்டிவிடக்கூடும் என்பதால் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தவிர்க்க அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், சட்ட மற்றும் பாதுகாப்பு நிர்வாகங்கள் மிகவும் முன்னெச்சரிக்கையோடு செயற்பட வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-5-6)

## வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கண்சுகாதாரம் தொடர்பிலான வேலைத்திட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணி வலயக் கல்வி பணிமனைகளூடாக நாளை முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதோடு தேவைப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற கூட் டத்தின் போது ஆளுநரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, மாகாணக் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகள் இணைந்து இதில் பங்காற்றவுள்ளன.

யாழ்.போதனா மருத்துவமனையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவன் வழிநடத்தலின் கீழ் 6 மாத காலத்திற் குள் இந்த செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரமத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்கள் மற்றும் சிவனடியார்களையும் கலந்துகொள்ளுமாறு அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5-6)

## காசா சிறுவர் நிதியத்திற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை நன்கொடை


(கொழும்பு)

காசா பகுதியில் இடம்பெறும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவர் நிறுவனத்தின் ஊடாக பாலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல்லாஹ் ஸைதிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

36

எனவே தமிழ்க் கட்சிகள் கூட்டாக மோட்டார் இலக்கத்தகடுகள் பற்றிய சட்டத்தை மீறி ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென்றும் அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கமாக இவ்வியக்கத்தை நடத்துவதென்றும் தீர்மானித்தன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி சிங்கள "ஸ்ரீ" எதிர்ப்புச் சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. "சிறி யை எதிர்ப்போம் சிறையை நிறைப்போம்", "நண்டெழுத்து வேண்டாம் நமக்கு", "எமது ஆர்ப்பாட்டம் சிங்கள சிறிக்கு எதிரானதல்ல. சிங்கள "ஸ்ரீ" தமிழ் மக்களுக்கு வேண்டாம். அதை தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்க வேண்டாம்" போன்ற முழக்கங்களோடு சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இயக்கத்தில் அகில இலங்கை காங்கிரஸ் தலைவரும், உறுப்பினர்கள் பலரும் சேர்ந்தனர். ஆயினும் அதன் பின் தொடர்ந்த இயக்கத்தில் ஏனையோர் ஈடுபடாது கைவிட, தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே தொடர்ந்து இயக்கத்தை நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

முதற்கட்டமாக ஒரு நாள் சட்ட மறுப்பாக ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துக்களை இலக்கத்தகடுகளிற் பொறித்து மோட்டார் வண்டிகளைச் செலுத்திய தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள், (குறிப்பு அக்கால கட்டத்தில் சிங்கள எழுத்து பொறிக கப்பட்ட இலக்கத்தகட்டு வாகனங்கள் அவர்களிடம் இருக்கவில்லை).

இரண்டாவது கட்டமாக நிரந்தரமாகவே தமிழ் எழுத்துக்களோடு மோட்டார் வண்டிகளைச் செலுத்தினர். மூன்றாவது கட்டமாக தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் வீதிகளில் செல்லும் எல்லா மோட்டார் வண்டிகளுக்கும் தமிழ் எழுதுக்கள் பொறித்த தகடுகளை மாட்டிவிட்டனர்.

சிங்கள ஸ்ரீ இலக்கத்தகடு பொருத்திய வாகனங்கள் கல் வீச்சுக்கு இலக்காகின. அல்லது சிங்கள ஸ்ரீ எழுத்துக்கள் தார்பூசி அழிக்கப்பட்டன.

அந்நிய மொழி ஆதிக்க வெளிப்பாடாக இலக்கத் தகடுகளிலிருந்த CE, CY, CN, CL, EL, EN முதலிய அனைத்தும் தமிழாக மாற்றப்பட்டன. தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் எதிலும் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வியக்கத்திற்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தது கவனிக்கத்தக்கதாகும்.

இப்போராட்டத்துக்கு மத்திய மலை நாட்டில் இந்திய வம்சாவளியினர் வாழும் பகுதிகளிலும் ஆதரவு கிடைத்தது. இதனால் அப்பகுதிகளில் சிங்கள-தமிழ் கலவரம் மூண்டது. இதன் போது பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க தொண்டமான் மத்திய மலைநாட்டின் நகரங்களுக்குச் சென்று நிலைமையை சீர் செய்தார்.

பின்னர் வெளியிட்ட ஊடக குறிப்பில் மலையக தமிழ் இளைஞர்கள் அமைதிகாக்க வேண்டுமெனவும் வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினையிலிருந்து மலையக தமிழரது பிரச்சினை வேறுப்பட்டது எனவும் சுட்டிக் காட்டினார். மேலும் யூன் 1957 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்காவுக்கு எழுதிய கடிதம் மூலம் இலங்கை சுதந்திரக் கட்சியையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் பேச்சுகளுக்கு இணங்கச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே 1957 பண்டா - செல்வா உடன்படிக்கையாகும். இது பண்டா செல்வா ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தின் ஊடாக பிராந்தியசபைகள் அமைத்தல் மற்றும் தமிழ் மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்த்து வழங்குதல் போன்ற வற்றுக்கு வழிசமைக்கப்பட்டது.

பல்வேறு அனுகூலமான அம்சங்களைக் கொண்டிருந்த "பண்டா-செல்வா" ஒப்பந்தத்தை அப்போதிருந்த பிரதான எதிர்க்கட்சிகள் எதிர்த்ததுடன் அதற்கு எதிரான பிரச்சாரத்தையும் மேற்கொண்டன. அவ்வாறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வெளியிடப்பட்ட ஒரு பிரச்சாரப்புத்தகத்தில் "பண்டா-செல்வா" ஒப்பந்தம் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது நோக்கத்தக்கது.

"இந்த ஒப்பந்தமானது ஒரு தமிழ் அரசை உருவாக்குவதற்கான முதலாவது ஏணிப்படி அவ்ரசில் எந்தச் சிங்களவரும் வேலை பெறவோ அல்லது நிலத்தைப் பெறவோ முடியாது. இதில் (தமிழர்களுக்கு) ஒரு மில்லியன் ஏக்கர் நீர்ப்பாசன வசதி கொண்ட புதிய நிலம் வழங்கப்படவுள்ளது. இதில் புதிய கைத்தொழில்களும் இலங்கையில் மிகச்சிறந்த துறைமுகம் உள்ளடங்கும்"

"பண்டா-செல்வா" ஒப்பந்தத்துக்கான எதிர்ப்புக்களின் உச்சமாக 1957 ஒக்டோபர் 5 இல் கண்டி நோக்கி ஆரம்பித்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே தலைமை தாங்கி நடத்தினார் என்பது நோக்கத்தக்கது.

அத்துடன், மேற்படி "பண்டா-செல்வா ஒப்பந்தம் தொடர்பில் பௌத்த மதத் துறவிகளும் இனவாதச் சிந்தனைகளைக் கொண்டிருந்தவர்களும் எதிர்ப்புக் குரல்களும் மேலோங்கி நின்றன. இந்த எதிர்ப்புக்களால் 1958 ஏப்ரல் 9 ஆம் திகதி பண்டாரநாயக்கா தனது ரோஸ் மீட் பிளேஸ் இல்லத்தின் முன்பாக ஒப்பந்தத்தில் பங்குகொண்ட மற்றைய தரப்பான தமிழரசுக்கட்சியுடன் எவ்வித ஆலோசனையும் செய்யாது ஒருதலைப்பட்சமாக "பண்டா -செல்வா" ஒப்பந்தந்தைக் கிழித்தெறிந்தார்.

### மீண்டும் சிங்கள ஸ்ரீக்கு எதிரான போராட்டம்

பண்டா- செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றாது காலங்கடத்தி வந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வேதனை தரும் செயல்களில் மீண்டும் இறங்கியது. சிங்கள ஸ்ரீ இலக்கத்தகடு பொறித்த பஸ் வண்டி களை (1957 இல் நிறைவேற்றப்பட்ட போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் பஸ் சேவை மக்கள் மயப்படுத்தப்பட்டது) வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்போவதாக அரசாங்கம் அறிவித்தது.

இவ்வாறு அனுப்பப்பட்டால் மீண்டும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பை ஆரம்பிக்க நேரிடும். அதனால் தமிழர்-சிங்களவர் ஒற்றுமை பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த தந்தை செல்வா போக்குவரத்து அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இச் சந்திப்புப் பற்றி அமைச்சர் மைத்திரிபாலா பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செய்தி வருமாறு, நான் உயர்ந்த மதிப்புடன் போற்றும் செல்வநாயகம் அவர்களுடன் சிங்கள ஸ்ரீ எழுத்துப் பிரச்சினை பற்றி கலந்துரையாடினேன். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓடும் பேருந்துகளின் இலக்கத்தகட்டில் தமிழ் எழுத்துப் பொறிப்பதை அதிகாரபூர்வமாக அனுமதிக்க முடியாது என்ற கருத்தை செல்வநாயகம் அவர்கள் புரிந்து கொண்டதாக நான் உணர்ந்தேன்.

எல்லா பேருந்துகளும் கொழும்பில் பதிவு செய்யப்படுகி ன்றன. இலக்கத்தகட்டில் உள்ள எழுத்து சிங்கள ஸ்ரீயாக இருக்க வேண்டுமெனச் சட்டம் பணிக்கிறது. சிங்கள ஸ்ரீ பொறித்த பேருந்துகள் எதனையும் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப வேண்டாம் என்ற அவரது கோரிக்கைக்கு நான் இணக்கம் தெரிவித்தேன்."

சிங்கள ஸ்ரீ பொறித்த பேருந்துகள் எதனையும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவதில்லை என்று ஒப்புக்கொண்ட போக்குவரத்து அமைச்சர் தமது உறுதியை மீறி 1958-03-17ல் சிங்கள ஸ்ரீ பொறித்த பேருந்துகளை வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பினார். இதனால் தமிழர்கள் 1958-03-29 இல் மீண்டும் சிங்கள ஸ்ரீக்கு எதிரான சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டம் தொடர்ந்தது. போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக பொதுமக்கள், தந்தை செல்வா உட்பட தமிழ் அரசியல்வாதிகள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் சிங்கள ஸ்ரீக்கு எதிரான சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டத்தில் சில பேருந்துகள் எரிக்கப்பட்டதும் குண்டு வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள ஸ்ரீக்கு எதிரான சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டம் 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29,30 மற்றும் 31 ஆம் திகதி வரையில் அமைதியாக நடைபெற்றபோதும் 1958-04-01 இல் போராட்டத்திற்கு எதிராக பௌத்த பிக்குகள் அரசாங்கக் கட்டடங்களிலிருந்த அறிவிப்பலகைகளிலிருந்த தமிழ் எழுத்துக்களை அழிக்கத் தொடங்கினார்கள்.

அத்தோடு தமிழ் மக்கள் மீதான காழ்ப்புணர்வும், வெறுப்புணர்ச்சியும் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஆங்காங்கே தாக்குதல்களும், வன்முறைச் சம்பவங்களும் ஆரம்பமாயின. சிங்கள "ஸ்ரீ" இற்கு எதிரான போராட்டத்தை முதலில் ஆரம்பித்த பா.உ. சி. சுந்தரலிங்கம் கடைசியில் இது ஒரு முட்டாள் வேலை, பைத்தியக்காரத்தனம் என்று கூறி தான் விலகியதோடு வன்னி மக்களையும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாமென்று தடுத்துவிட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதி ஒருவர்...

வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதை யடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் குறித்த கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாகவே குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஜா எல பகுதியைச் சேர்ந்த 34 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (ம-7,10,33,250)

## மட்டி எடுக்கச்...

ரவீந்திரன் கவிஜன் (வயது- 19) என்ற இளைஞனே உயிரிந்துள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றில் பணி புரிந்து வரும் மேற்படி இளைஞர் குருநகர் பகுதியில் உள்ள தனது பெரியம்மா வீட்டில் தங்கி இருந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00 மணியளவில் மட்டி பொறுக்குவதற்காக பெரிய தந்தையுடன் கடலுக்குச் சென்றுள்ளார்.

அந்நேரம் கடல் உள்வாங்கி இருந்ததன் காரணமாக கடலுக்குள் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று இருந்தபோது அதிகாலை 3.30 மணியளவில் கடல் திடீரென மீண்டும் பெருக்கெடுத்ததனால் பெரிய தந்தையால் இளைஞரை காப்பாற்ற முடியவில்லை.

இதனையடுத்து அவர் கரையோறி விடயத்தை தெரிவித்ததை அடுத்து கடற்படையினர் பொதுமக்கள் இணைந்து தேடுதல் நடத்திய நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,10,33,60)

## மயங்கி...

என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயமொன்றுக்கு சென்று வழிபட்ட பின்னர் தேங்காய் உடைத்து விட்டு வீடு திரும்பிய முதியவர் இயலாத நிலையில் வரம்பொன்றில் அமர்ந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்தில் இருந்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில்சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,33)

## எரிபொருள்...

பொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி 447 ரூபாயாக நிலவிய ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றரின் விலை 07 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 440 ரூபாயாகும்.

அதேநேரம் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 72 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 386 ரூபாயாகும்.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 245 ரூபாயாகும்.

அதேநேரம் ஒக்டேன் 92 பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாய்க்கும் ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 363 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. (ம-7,10)

## மரண தண்டனை...

குறித்த நபர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே உயிரிழந்துள்ளார்.

அவர் நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலையின் ஊடக பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ம-7,10)

## சமையல்...

எது.

அந்தவகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 135 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 4,115 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 55 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,652 ரூபாயாகும். 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 23 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 772 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் லாஃப்ஸ் எரிவாயுவின் விலையை குறைக்க லாஃப்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை 625 ரூபாயினால் குறைக்கப்படும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,111 ரூபாயாகும். அத்துடன், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதியவிலை 1,652 ரூபாயாகும் (ம-7,10)

## வடக்கு...

நிலையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பி.கே.விக்கிரமசிங்கவும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சுபாஸ்கரனும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வினோதனும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக உமாசங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக ஜி.சுகுணனும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக எம்.எச்.எம். அசாத்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக பி.எஸ்.என்.விமலரட்ணவும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலை பணிப்பாளராக வீரக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றி இடமாற்றப்பட்ட திலீப் லியனகே அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நியமனம் வழங்கப்பட்டவர்கள் விரைவில் கடமைகளை பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10,33)


மஹஜன சம்பத
திகதி 2024.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 5437
Q 9 0 9 8 2 4
அத சம்பத
Q 9 8 2 4
சீட்டிழுப்பு இலக்கம் 012
19609

தன நிதானய
திகதி - 2024.04.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1467
R 30 45 57 59 R
14430

மெகா பவர்
திகதி 01/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1785
Y 20 09 19 43 50
87702

லக்சி 7 VIP
திகதி 2024.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 0263
J 8 3 7 7 3 2 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3679
சீட்டிழுப்பு திகதி 01.04.2024
H 44 45 59 80
H
31870

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 0746
கன்னி 21 22 36 57 கன்னி
33311 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.04.2024 வெற்றி வாரம் 145 வர்ணம் ஊதா
சுப்பர் பூக்கம்
K 9 4 0 6 2 6
74200
U
அடுத்த சுப்பர் ஜக்பொட் 32,359,480.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2411 வர்ணம் ஊதா சீட்டிழுப்பு திகதி 01.04.2024 தினம் திங்கள்
01 15 33 47 D
46934
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,546,189.60

சனிதா
திகதி 2024.04.01 வெற்றி வாரம் 4572
04 16 30 40 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,897,920.40
14753

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4123 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.01 தினம் திங்கட்கிழமை
07 26 28 47 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 15,972,123.20
414459


ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 36 01 03 18 64
1587 பச்சை 2024.04.01 திங்கள்
134408
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 515,345,229.80

ஜயோதா Jayoda
திகதி 2024.04.01 வெற்றி வாரம் 2013 வர்ணம் செம்மஞ்சள்
07 16 23 55 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,775,320.40
10321

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2237
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 103,543,000.80
26 28 31 69 T
883701


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நன்றி நவிலலும் நினைவு நாள் அழைப்பும்



தாயின் மடியில்
17 . 08 . 1947

இறைவன் அடியில்
03 . 03 . 2024

## அமரர் திரு. இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

யாழ் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சவுதிஅரேபியா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலச்சந்திரன் அவர்களின் 31 ஆம் நாள் நன்றி நவிலலும் நினைவு நாள் அழைப்பும்.

மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வருகை தந்தும் தொலைபேசியூடாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு உதவிகளை உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியையில் பங்குபற்றிய பெருமக்களுக்கும் மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்திலும் தகனக்கிரியையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் உங்களது மாசற்ற அன்பையும் சேவையினையும் பங்களிப்பினையும் நீரா நினைந்து நவில்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் 02.04.2024 இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(0005)

மஞ்சவனப்பதி முருகன் கோவில்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
076 116 5763
தகவல்: குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவு அலைகள்



தோற்றம்
11 . 02 . 1945

மறைவு
13 . 04 . 2023

அமரர்
## கோபாலசிங்கம் ஜெயலட்சுமி

அம்மா என அழைத்தால்
ஓடிவந்து அணைப்பவளே – இன்று
அம்மா, அம்மா என அலறுகிறோம்
உன் திருமுகம் காண முடியவில்லையம்மா
ஆண்டொன்று ஆனதம்மா உன்திருமுகத்தை
காணவில்லை
மீண்டும் இங்கே வாராயோ – எம்
வேதனைகள் தீராயோ?
அப்பா இங்கே கதறுகிறார் – என்
கண்மணி எங்கே போனதென்று
கண்ணீர் ஒன்றே தஞ்சமென்று – என்
கவிதை உன்னை கெஞ்சுதம்மா
ஆழ்கடல்தான் உன் அன்பு – அதில்
அலைபோல் தவழ்ந்தோம் உன் மடியில்

தேன் போன்ற உன் சிரிப்பு – அதில்
எம் கவலை எல்லாம் பறந்துவிடும்
உன் காலடியில் கெஞ்சுகிறேன்
மீண்டும் நீ எம்மிடம் வந்திடம்மா
உன் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்.
வேதனையில் தவிக்கின்றோம்.
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஒளிர்ந்தவளே அம்மா
நீர் அணைந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உன் சிரித்த முகத்தை முன் நிறுத்தி
என்றும் உங்கள் நினைவுடனே வாழுகிறோம்
எமக்காய் நீ இங்கே மறுபடியும்
வந்து பிறந்திடம்மா.

(0003)

இல.3,
ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.

Whatsapp
416 303 5706
SRILANKA
076 934 7728
(324)

## அதீத வேகம் வீட்டுக்குள் நுழைந்த மோ. சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ் இராசாவின் தோட்டப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீட்டின் வாசல் கதவினை பிரிந்து உள்ளே நுழைந்து விபத்துக்குள்ளானது. நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ் ஆரிய குளப் பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அருகில் இருந்த வீட்டின் மூடிய வாயில் கதவினை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (328)

076 825 7716 (ஆகாஸ்)

யாழ்.கச்சேரிக்கு அருகில்
காணி உடன் விற்பனைக்கு
(விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:
+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk
(225)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (318)
074 17 37 684

CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.
021 222 5686
076 424 7111
(293)
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

கொழும்பில் அறைகள், வீடு
நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
(C-0051)
V2 GUEST 0743900360 0743900361

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0051)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அன்னலட்சுமி பத்மநாதன்

திதி : அட்டமி (02.04.2024)

இதயங்கள் எல்லாம் நொருங்க
இமைகள் எல்லாம் நனைய
எங்களை தவிக்க விட்டு
எங்கே சென்றீர்கள்
பாசத்தின் உருவமான
அம்மாவே அம்மம்மாவே
பாதியிலே எமை விட்டு
போனீர்களே.
ஆண்டுகள் ஐந்து ஆனதே
இன்றுடன் எமைவிட்டு பிரிந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் முருகனை வேண்டுகின்றோம்.

(C-0050)

தோற்றம் 21.04.1939
மறைவு 28.03.2019

இல.103/1, கோயில் வீதி,

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தா... இல.190, ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.